# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/9 - 2015 දෙසැම්බර් මස 28 වැනි සඳුදා - 2015.12.28

*1947/9 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் உலக வங்கி நிதியளிப்பின் கீழ் முழங்காவில் நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நீர் கோபுரத்தினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, திசெம்பர் 15.*
*5/2/1/ 1163.*

**அட்டவணை**

*கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் முழங்காவில் கிராம அலுவலர் பிரிவில் முழங்காவில் எனும் ஊரில் அமைந்துள்ள பள்ளிய இடம எனும் காணியிலிருந்து 18 பேர்ச்சஸ் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்துள்ள காணித்துண்டு :-*

வடக்கு : தேவாலயத்திற்குச் சொந்தமான காணி ;
கிழக்கு : மன்னாரிலிருந்து பூநகரி வரையிலான பெருந்தெரு மற்றும் வீதி ஒதுக்கீடு ;
தெற்கு : இழநிலா குடியிருப்பு வீதி ;
மேற்கு : இக்காணியின் மீதித்துண்டு.

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* பொறுப்பாளர் சபை,
புனித மேரி தேவஸ்தானம்,
ரதகுரு நில நிவச,
தபால் பெட்டி இல. : 02,
யாழ்ப்பாணம்.

*1- 491*

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கண்டி வடக்கு - பாத்ததும்பரை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்திலமைந்த முன்மொழியப்பட்ட முல்லேபிஹில்லை மேற்சேவை நீர்த்தேக்க நுழைவு வழியின் பொருட்டு காணித்துண்டொன்றை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டின் உரிமை கொள்ளலைப் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 15.
5/2/1/ 1161.

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில் கண்டி மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் வெவதென்ன கிராம அலுவலர் பிரிவில் அமுபத்தகட – முல்லேபிஹில்லை ஊரில் அமைந்துள்ள ஹீயவெல கந்துர, அமுபத்தகடஹேன மற்றும் ஒருவேஹேன எனும் காணியின் மொத்த விஸ்தீரணத்திலிருந்து 35 பேர்ச்சஸ் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்துள்ள காணித் துண்டு :-

வடக்கு : இக்காணியின் மிகுதித் துண்டு ;
கிழக்கு : ஒருவேஹேன;
தெற்கு : வீதி ;
மேற்கு : இக்காணியின் மீதித்துண்டு.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: பீ. ஏ. ப்றொபர்டீஸ்,
இல. 116,
லேயாஸ் புறோட்வே,
கொழும்பு 14.

1- 492

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் ஆணைமடு நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் மஹகும்புக்கடவல (வேலுசுமணபுர) நீர்க் கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் வரி உரிமைப் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 15.
5/2/2/ 1169.

**அட்டவணை**

புத்தளம் மாவட்டத்தில் முந்தலம பிரதேச செயலாளர் பிரிவில் இல. 608ஏ, வேலுசுமணபுர கிராம அலுவலர் பிரிவில் வேலுசுமணபுர எனும் ஊரில் அமைந்துள்ள வேலுசுமணபுர மதுரங்குளி எனும் காணியின் மொத்த விஸ்தீரணத்திலிருந்து 40 பேர்ச்சஸ் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்துள்ள காணித்துண்டு :-

வடக்கு : கிவுல 8 ஆம் இலக்க வீதி ;
கிழக்கு : மாநெல் பிரநாந்துவின் மிகுதிக்காணி ;
தெற்கு : மாநெல் பிரநாந்துவின் மிகுதிக்காணி ;
மேற்கு : சிசில சமூக அடிப்படையிலான அமைப்பினுடைய காணி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திரு. மாநெல் பிரநாந்து,
வெலாசிய,
மதுரங்குளிய.

1- 493

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் பதுளை நகர கழிவுநீர் மற்றும் மல வடிகாலமைப்புக் கருத்திட்டத்தில் அமைந்த சுத்திகரிப்புத் தொகுதியினை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்ட காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 15.
5/2/2/ 1158.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில் பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 78K, ஹிந்தகொடை கிராம அலுவலர் பிரிவில் ஹங்வெல்ல எனும் ஊரில் அமைந்துள்ள பல்லேஓதலாவ எனும் காணியின் மொத்த விஸ்தீரணத்திலிருந்து 01 ஏக்கர் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்துள்ள காணித்துண்டு :-

வடக்கு : துண்டு இல. 42 மற்றும் 43 ;
கிழக்கு : துண்டு இல. 44 ;
தெற்கு : கால்வாய் ;
மேற்கு : நம்புக்பொத்த ஓயா.

காணிக்கு உரிமைகோருபவர்களின் பெயர் மற்றும் முகவரி: திரு. என். ஜீ. சுமனசேன,
திரு. என் . ஜீ. உபசேன,
கோப்பிவத்தை, ஹேகொடை,
பதுளை.

1- 494

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையினால் ஹல்தும்முல்லை பெரகல நீர்வழங்கல் கருத்திட்டத்தில் அமைந்த நீர் சுத்திகரிப்புத் தொகுதி, நீர்த்தாங்கி மற்றும் கட்டடத்தினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டுகள் மூன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 15.
5/2/1/ 1153.*

**அட்டவணை**

*பதுளை மாவட்டத்தில் ஹல்தும்முல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 158ஜி, வீரகோன்கம கிராம அலுவலர் பிரிவில் வீரகோன்கம துல்தொட்ட சொஹொன் கனத்த பதன எனும் ஊரில் அமைந்துள்ள துல்தொட்ட சொஹொன் கனத்த பதன எனும் காணியின் மொத்த விஸ்தீரணத்திலிருந்து 02 ஏக்கர் 01 றூட் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்துள்ள காணித்துண்டு :-*

காணியின் பெயர் : துல்தொட்ட சொஹொன் கனத்த பதன ; விஸ்தீரணம் : 3 நூட்.

வடக்கு : அரச ஒதுக்கீடு ;
கிழக்கு : திரு. பதிரண உரிமை கொண்டாடும் காணி ;
தெற்கு : வீரகோன்கம வீதி ;
மேற்கு : சொஹொன் பூமிய.

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* திருமதி ஆர். எம். நந்தாவதி,
அநுர நிவச, வீரகோன்கம
களுபஹண.

காணியின் பெயர் : துல்தொட்ட சொஹொன் கனத்த பதன ; விஸ்தீரணம் : 01 ஏக்கர்.

வடக்கு : அரச ஒதுக்கீடு ;
கிழக்கு : திரு. ஜே. எம். சீ. ரத்னசிரி உரிமை கொண்டாடும் காணி ;
தெற்கு : வீரகோன்கம வீதி ;
மேற்கு : திருமதி ஆர். எம். நந்தாவதி உரிமை கொண்டாடும் காணி.

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* திரு. வீ. எஸ். பீ. பதிரண காமினி,
வீரகோன்கம,
களுபஹண.

காணியின் பெயர் : துல்தொட்ட சொஹொன் கனத்த பதன ; விஸ்தீரணம் : 02 றூட்.

வடக்கு : அரச ஒதுக்கீடு ;
கிழக்கு : திரு. முத்துபண்டா உரிமைகொண்டாடும் காணி ;
தெற்கு : வீரகோன்கம வீதி ;
மேற்கு : திரு. பதிரண உரிமை கொண்டாடும் காணி.

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* திரு. ஜே. எம். சீ. இரத்தினசிரி,
வீரகோன்கம,
களுபஹண.

*1- 495*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.